செய்தி வெளியீடு எண்: 38 நாள்:21.01.2021

<u>செய்தி வெளியீடு</u>

## “தேசிய மன நலன் கொள்கை” (National Mental Health Policy) குறித்து மறுஆய்வு கருத்தரங்கம்

தமிழகத்தில், **தேசிய மன நலன் கொள்கை** செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து ஆய்வுக்கூட்டம், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்களின் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக 21.01.2021 அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், இக்கொள்கையை தமிழகத்தில் செயல்படுத்திடும் பொறுப்பு கொண்டுள்ள துறைகளான, தேசிய சுகாதார திட்டம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகம், அரசு மனநல மருத்துவ நிலையம், மருத்துவக் கல்வி இயக்குநரகம் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் மூத்த மருத்துவ அலுவலர்களும், மன நல மருத்துவ வல்லுநர்களும், பிற அரசு துறைகளிலிருந்து உயர் அலுவலர்களும் இணைய வாயிலாக பங்கேற்று தங்களது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கினர்.

மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்பாளர்களை வரவேற்று பேசியதுடன், இந்த ஆய்வின்முக்கிய குறிக்கோளை சுருக்கமாக எடுத்துரைத்தார்.

மைய அரசின் தேசிய மன நலன் கொள்கையினைப் பின்பற்றி, மாநில அரசும் இதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைய இயலும் என்ற கருதுகோளின்படி, பொது மக்களின் சிறந்த ஆற்றலை மேம்படுத்துவது மற்றும் இக்கொள்கையை செயல்படுத்துவதற்குத் தகுந்த இடையீடுகளை வழங்கி இத்திட்டத்தினை பரவலாக்குவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இக்கொள்கை மாநில அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட மன நலன் திட்டத்தின் வாயிலாக இக்கொள்கை செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து, சென்னையில் உள்ள மன நல மருத்துவ நிலையத்தின் இயக்குநர், மருத்துவர் பூர்ண சந்திரிகா அவர்களால் விரிவாக விளக்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள ஆதரவற்ற, மனநலன் பாதிக்கப்பட்ட நபர்களின் பராமரிப்பு குறித்து, பான்யன் (The Banyan) நிறுவனத்தின் இயக்குநரும், மூத்த மன நல ஆலோசகரும் மன நல மருத்துவப் பணிகளின் வல்லுநருமான மருத்துவர் கே.வி. கிஷோர் குமார் அவர்கள் கருத்து தெரிவித்தார்.

சென்னையில் உள்ள ஸ்கார்ப் (SCARF) நிறுவனத்தின் மூத்த மனநல ஆலோசகரும், தொலைபேசி வாயிலாக மன நலனுக்கான ஆலோசனைகளை வழங்கி வரும் மருத்துவர் இலட்சுமி வெங்கட்ராமன் அவர்கள், இக்கொள்கையை மாநிலத்தில் சிறப்பாக செயல்படுத்திடும் பொருட்டு, மன நலன் பேணுவதற்கான ஆலோசனைகள் தேவைப்படுபவர்களுக்கு, தொலை தொடர்பு வாயிலாக உரிய ஆலோசனைகள் உடனடியாக அளிப்பதற்கு ஏதுவாக, தொலை தொடர்பு அமைப்பினை வலிமைப் படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், திரு. சி. பொன்னையன் அவர்கள் தனது நிறைவுரையில், மக்கள் தங்களது ஆற்றலை நன்கு உணர்ந்து செயல்படவும், அன்றாட வாழ்வில் ஏற்படும் சாதாரண மன அழுத்தங்களை கையாள்வதற்கும், உற்பத்தித் திறனை கொண்டிருப்பதற்கும் மற்றும் சமுதாயத்திற்கு தேவையான பங்களிப்பினை அளிப்பதற்கும், ஆரோக்கியமான மன நலன் பெரிதும் உதவி புரிகிறது எனக் குறிப்பிட்டார். மாவட்ட மன நல திட்டங்கள் மூலமாக மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மன நல ஆலோசனை மற்றும் சிகிச்சை வழங்குவதில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது என்பதை சுட்டிக் காட்டினார். தமிழகத்தின் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களிலும் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு மனநல ஆலோசகர் மூலமாக சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதையும் தெரிவித்தார். மாநில மன நலன் பராமரிப்பு கொள்கையின் குறிக்கோள்கள் மற்றும் தொலைநோக்கினை அடைய கள நிலவரத்தினை அறிந்து அதன்படி அளிக்கப்பட வேண்டிய விரிவான தீர்வுகளை உண்டாக்குவதற்கு ஏதுவாக, மாநிலக் கொள்கையின் அமைப்பு ரீதியிலான திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். இதன் வாயிலாக, மன அழுத்தம் உள்ளிட்ட மன நோய் பாதிப்பிற்குள்ளான மக்களும் அவர்தம் குடும்பத்தினரும் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்களும் சிறந்த பயன் பெறுவர் என்பதை அவர் எடுத்துரைத்தார்.

மேலும், அவர் இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் உரிய பரிசீலனைக்காக அரசிற்கு அனுப்பி வைக்கப்படும் என உறுதி அளித்தார்.

**உறுப்பினர் செயலர்**
**மாநில வளர்ச்சி கொள்கைக் குழு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**